பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன்

மலர்: 20 சென்னை: ஐப்பசி 3 வியாழன் (19—10—72) வெளியூர்: ஐப்பசி 4 (20—10—72) வெள்ளி [இதழ்: 104

நகராட்சிகள் கடன் பெற கிராமவளர்ச்சி வாரியம்

தஞ்சை, அக். 19—

நகராட்சி மன்றங்களுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்தும், தேசியமயமாக்கப்பட்ட பாங்கிகளிடமிருந்தும் கடனுதவி பெறுவதற்காகக் கிராம வளர்ச்சி வாரியம் ஒன்று அமைப்பது குறித்துத் தமிழக அரசு பரிசீலித்து வருவதாகத் தெரியவருகிறது.

சிங்கமென சிலிர்த்தெழுந்தது தி.மு.க.

தியாகச்செம்மல்கள்சிந்தியசெந்நீரால் கட்டுக்கோப்புடன் நிமிர்ந்து நிற்கிறது

வஞ்சகத்தால் அதனை வீழ்த்திவிட இயலாது

கழகத் தலைவர் கலைஞர் இலட்சிய முழக்கம்

சென்னை, அக். 19—

"திராவிட முன்னேற்றக் கழகம், ஆயிரக்கணக்கான — இலட்சக்கணக்கான தோழர்களால் செந்நீரும், கண்ணீரும் கொட்டப்பட்டு வளர்ந்ததாகும்!

"திராவிட முன்னேற்றக் கழகம், ஏதோ ஓர் ஏகாந்த வெளியில் — ஒரு மாட மாளிகையில் — கூட கோபுரத்தில் — பத்துப் பதினைந்துபேர் உட்கார்ந்து உருவாக்கிய இயக்கமல்ல; இதற்காகச் சிந்தப்பட்ட இரத்தம் — ஒடித்துத் தரப்பட்டிருக்கின்ற எலும்புகள் — நாம இழந்திருக்கின்ற உயிர்கள் ஏராளம்! ஏராளம்!!

"எத்தனையோ தோழர்கள் படுகொலைக்கு ஆளானார்கள்; நாம் எதிர்க் கட்சியாக இருந்த நேரத்தில் மட்டுமல்ல — ஆளும் கட்சியாக ஆகிவிட்டிருக்கின்ற இந்த நேரத்திலகூடப் பல தோழர்கள் படுகொலைக்கு ஆளாகவேண்டிய நிலையில் இருக்கின்றார்கள்! எதிரிகளால் — மாற்றாரால் இன்றைக்கும் தாக்குதலுக்கு உட்படுகின்ற நிலையில்தான் தி. மு. கழகம் இருந்துவருகிறது!

"இவ்வளவு பொறுமையையும் — அமைதியையும் ஏற்படுத்தித் தந்த அண்ணா அவர்கள, 'தம்பி — இதுதான் என வழி; இவைதான் தி. மு. கழகத்தின் வழி' என்று விளக்கியிருககிறார்!

"அப்படிப்பட்ட கழகத்திற்கு இன்று ஒரு சோதனை வந்துவிட்டதாக நண்பர்கள் கருதக்கூடும்; நான்கூட அவ்வாறு எண்ணியது உண்டு!

"தி. மு. கழகம் மலையென நிமிர்ந்து நிற்கிறது! தூங்கிய சிங்கம் உடம்பைச் சிலிர்த்துக்கொண்டு எழுந்து நிற்பதைப்போல் இன்று தி. மு. கழகம் நிற்கின்ற காட்சியை நாம் காண்கிறோம்; கழகத்தின் எந்த முனையிலும் ஒரு இம்மி அளவுகூடச் சேதாரம் ஏற்படவில்லை"

இவ்வாறு கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், சென்னை 36-வது வட்டம் சூளை தி. மு. க. சார்பில் நேற்று நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்; அவர் மேலும் கூறியதாவது:—

"எத்தகைய நிலைகள் தி. மு. கழகத்திற்குச் சோதனைகளாக அமைந்தாலும் கழகத் தோழர்கள் அமைதியாகவும் — பொறுமையாகவும் — நிதானமாகவும் — அதே நேரத்தில் உறுதியாகவும் நின்றிட வேண்டும்.

"திராவிட முன்னேற்றக் கழகம் என்பது, ஏதோ நான்கு பேர் உட்கார்ந்து இரண்டு மணி நேரம் பேசி — 'இதற்கு என்ன பெயர் வைக்கலாம்' என்று ஒருவருக்கொருவர் உரையாடி — 'என்ன கொடி வைக்கலாம்' என்று ஒருவருக்கொருவர் கேட்டு — இப்படி, அவசரத்திலே பிறந்தது அல்ல! அதற்கு ஒரு பெரிய வரலாறு உண்டு! அந்த வரலாற்றை — அதனுடைய தொடர்ச்சியை எவரும் மறந்துவிடக் கூடாது!

முன்னேற்றக் கழகம் திராவிடக் கழகத்திலிருந்து பிறந்தது; அப்படிப் பிறந்த நேரத்தில எவ்வளவு நாள் யோசனை — எவ்வளவு நாள் அதற்காக உள்ளத்தை — எந்தெந்த வகையிலெல்லாம் புண்ணாக்கிக் கொள்ள வேண்டிய சங்கடம்! இவைகளையெல்லாம் கழகத்தைக் கட்டிக்காக்கும் யாரும் மறந்திருக்க முடியாது!

நாம் அன்று பெரியாரிடத்திலிருந்து பிரியவேண்டிய துர்ப்பாக்கியமான நிலை ஏற்பட்டது; பெரியார் நம்மை சமுதாயத் துறையில் — அரசியல் துறையில் — இனத் துறையில் விழிப்படையச் செய்தார்; அவருடைய பள்ளியில் நாம் பயின்றோம், அவருடைய பாசறையில இருந்தோம்; அவரால் அரசியல் அறிவு ஊட்டப் பெற்றோம்.

அப்படிப்பட்ட பெரியாரிடத்திலிருந்து தி. மு. கழகம் பிரிந்த நேரத்தில் அண்ணா அழகாகச் சொன்னார் — 'இரட்டைக் குழல் துப்பாக்கியாகத் திராவிடக் கழகமும் — திராவிட முன்னேற்றக் கழகமும் நாட்டில் பணியாற்றும்' என்று! அப்படியே பணியாற்றினோம்!

இடையில் எத்தனையோ பூசல்கள் ஏற்பட்டாலும் — பெரியார் அவர்களேகூட ஏசுகின்ற அளவிற்கு நிலைமைகள் வளர்ந்தாலும், அந்த நேரத்தில அண்ணா அவர்கள் சொன்னார்கள் — 'பெரியார் அவர்கள் அடித்து அடித்து வளப்படுத்துகிறார்; நம்மைத் திட்டித் திட்டி நமக்கு உரமூட்டுகிறார்' என்று!

எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தை வன்முறைகளால அழித்துவிடலாம் — முன்னேற்றக் கழக அரசை

(5-ம் பத்தி பார்க்க)

(2-ம் பத்தித் தொடர்ச்சி)

வீழ்த்திவிடலாம் என்று யாரும் கருதுவார்களேயானால் திராவிடப் பெருங்குடி மக்களே — திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல்வீரர்களே — அண்ணா அவர்களால், 'தம்பி, தம்பி' என்று அழைக்கப்பட்டவர்களே — அண்ணாவின் கல்லறையின் பெயரால் கேட்டுக் கொள்வேன் — இந்தக் கழகத்திற்காக இரத்தம சிந்திய தியாகச் செம்மல்களின் பெயரால் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்வேன் — நம்முடைய உயிர் போவதாக இருந்தாலும், அண்ணா வழிநின்று திராவிட முன்னேற்றக் கழகத்தினைக் காப்போம், காப்போம்' என்று சூளுரை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று!"

இவ்வாறு கழகத் தலைவர் கலைஞர் கூறியபோது கூடியிருந்த மக்கள் 'காப்போம் — கழகத்தைக் காப்போம்' என்று மக்கள் கூறியது மெய்சிலிர்க்க வைப்பதாக இருந்தது!

வன்முறைகள் நீடித்தால்...

சட்டத்தின் முன்னிலையில் நிறுத்தப்பட்டே தீருவர்

அமைதியைச் சீர்குலைப்பவர்கள் நிலைமையை மோசமாக்கிவிட்டனர்

சென்னை, அக். 19—

"எம். ஜி. ஆர். அவர்களையும் — அவர் சார்பிலே வன்முறைகளைத் தூண்டிவிடுகிறவர்களையும், 'கழகத் தலைவன்' என்ற முறையிலே நான் கேட்டுக்கொள்ளலாம்; ஆனால், 'முதலமைச்சன்' என்ற முறையிலே ஒன்றைச் சொல்லிக்கொள்வேன் —

விருத்தாசலத்தில தென்னாற்காடு மாவட்ட தி. மு. க. செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான எம். செல்வராஜ் வீட்டை முற்றுகையிட்டு அவரைத் தாக்குவதற்காகச் சென்றிருக்கிறார்கள்; சென்னை மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் வீட்டைக் கொளுத்த முயற்சிக்கப்பட்டு அது தடுக்கப்பட்டிருக்கிறது; அமைச்சர் சத்தியவாணிமுத்து அம்மையார் வீட்டில் கல் வீசப்பட்டிருக்கிறது; மாநகராட்சி ஜீப் ஒன்று நடுரோட்டிலேயே நிறுத்தி எரிக்கப்பட்டிருக்கிறது; பல இடங்களில் பொதுமக்களுக்கு இன்னல்கள் விளைவிக்கப்பட்டிருக்கின்றன; விருத்தாசலத்தில் போலீசார்கூடத் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் அளவுக்கு நிலைமை உருவாகி — துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டிய அளவுக்கு நிலைமை மோசமாகியிருக்கிறது.

"இப்படிப்பட்ட வன்முறைகள் நீடிக்குமேயானால், 'மிகக் கடுமையாக நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும்' என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

"நாட்டிலே சட்டம — ஒழுங்கு — அமைதியைக் குலைப்பவர்கள் யாராக இருந்தாலும், தூண்டிவிடுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன்னிலையில் — குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டியவர்களாகி விடுவர்."

— முதலமைச்சர் கலைஞர்

'ஒட்டுக் காங்கிரசு உருவாகியிருக்கிறது'

ஆற்றைத் தாண்டும் பாலமாகக் கருதியே புதிய கட்சி தொடங்குகின்றனர்

என்றைக்காவது 'அங்கே' சென்று அது ஒட்டிக்கொள்ளும்

'திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்து புதிய கட்சி தொடங்குகிறவர்களெல்லாம், ஆற்றைத் தாண்டுகின்ற பாலமாகக் கருதித்தான் புதிய கட்சியைத் தொடங்கியிருக்கிறார்கள்!

முன்பு ஒரு புதிய கட்சி தொடங்கப்பட்டபோது, அதை 'குட்டிக் காங்கிரசு' என்று சொன்னேன்; அண்ணா அவர்கள், 'அப்படிச் சொல்லாதே' என்றார்; உடனே நான் 'இல்லை அண்ணா; அது அப்படித்தான் போகும்—பாருங்கள்' என்று சொன்னேன்.

குட்டிக் காங்கிரசு' என்று சொன்னேன்—அது, குட்டிக் காங்கிரசாகவே ஆகிவிட்டது!

இப்போது தொடங்கப்பட்டிருப்பது, 'ஒட்டுக் காங்கிரசு; இது என்றைக்காவது அங்கே சென்று ஒட்டிக்கொள்ளக்கூடியதே தவிர, இது ஏதோ அண்ணா பெயரால்—முன்னேற்றக் கழகத்தின் பெயரால தொடங்கப்பட்டிருக்கிறது என்று எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை!"

—கழகத் தலைவர் கலைஞர்

(சென்னை—சூளைக் கூட்டத்தில்)

ஐதராபாத், அக். 19—

அடுத்த 'ராபி' அறுவடையிலிருந்து உணவுத் தானிய மொத்த வர்த்தகத்தைத் தானே மேற்கொள்ள ஆந்திர மாநில அரசு முடிவுசெய்திருக்கிறது.

அண்ணாவின் மாற்றுருவே தி.மு.க.

இயக்கமே நமக்கு தாய்-தந்தை-வீடு

துரோகம் இழைக்கத் துணிந்தவரைத் தாங்கிக் கொள்ள முடியாது

கடற்கரைக் கூட்டத்தில் பேராசிரியர் முழக்கம்

சென்னை, அக். 19—

"தமிழ் காத்த இயக்கம் தி.மு.க. -- தமிழ் மக்களின் நலன் காக்க உயிர்தந்த இயக்கம் தி.மு.க. -- தமிழர்களுக்காகச் சிறை சென்ற இயக்கம் தி.மு.க.; அப்படிப்பட்ட இயக்கம், சிறைக்கே போகாத -- எந்தப் போராட்டத்திற்கும் தலைமைவகிக்காத எம்.ஜி.ஆர். அவர்களிடம் மன்னிப்புக் கேட்பதா?

"எம் ஜி.ஆர். செய்யும் காரியங்களின் விளைவுகளால் தி. மு. கழகத்தை அழிக்க யாரும் இடம் தந்துவிடக் கூடாது; நமது அரசியல் புனித வாழ்வுக்கு ஊறு தருகின்ற யாரையும் பொறுத்துக்கொள்ள முடியாது.

"தனிப்பட்டவர்கள் நமக்கு முக்கியமல்லர் -- இயக்கம் தான் நமக்குத் தாய் – தந்தை – வீடு; அப்படிப்பட்ட கழகத்தைக் கட்டிக்காக்க வேண்டும்"

என்று பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், அக். 15-ம் நாளன்று சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற பொதுக்குழு முடிவுகள் விளக்கப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் தெளிவுறச் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார்; அவர் மேலும் கூறியதாவது:—

"தி. மு. கழகத்தின் பாரம்பரியம்படி -- அண்ணா பயிற்றுவித்த வழிமுறையில் கழக அரசு தவறாது நடைபோட்டுக் கொண்டிருக்கிறது.

நம்முடைய இயக்கத்திற்கு வந்து எத்தனையோ பேர் புகழ் பெற்றிருக்கிறார்கள் -- அறிமுகமில்லாத எத்தனையோ பேர் தலைவர்களானார்கள -- அண்ணாவின் இதயத்தில் இடம் பெற்றிருக்கிறார்கள்; அந்த வகையில், கலைஞருக்கும் -- நாவலருக்கும் பக்கத்திலே கழகத்தின் பொருளாளராக எம். ஜி. ஆர். அவர்கள் இருந்தார்கள்.

அவரை நடிகர் என்பதால் அல்ல -- 'அண்ணாவைப் பின்பற்றியவர்' என்பதால், நாங்களெல்லாம் மேடைகளில் பேசிக் கொண்டிருந்தபோது கழக மேடையில் ஏறியவர் என்றாலும் -- அவருக்கு முன்னதாகவே நாங்கள் கட்சியில் இருந்தாலும் -- அவரை எங்களுக்கு முன்னாலே பொறுப்பான இடத்தில் இருக்க வைத்தோம்; எனவே அவர், ஏழைகளுக்கு நன்மை செய்யும் தி மு. கழகத்திற்குத் துரோகம் இழைப்பதைத்தான் தாங்கிக்கொள்ள முடியவில்லை!

இந்த மேடையில் இருக்கின்ற யாரும், அண்ணாவுக்கு துரோகமிழைத்தவர்களல்லர்; இங்கே இருப்பவர்கள் அனைவரும் எம். ஜி. ஆரைவிட அண்ணாவை அறியாதவர்களல்லர்; எனவே அவர், "எங்களைவிட அண்ணாவுக்குச் சொந்தமானவர்என அதனை யாரும் ஏற்கமாட்டார்!

கலைஞர் அவர்கள் திரைப்படத்திற்குக் கதை -- வசனம் எழுதிக் கொண்டிருந்தாலே கோடீசுவரராகி இருப்பார்!

நாவலர் அவர்கள் -- அண்ணா சொன்னதுபோல் -- பேராசிரியராக ஆகியிருந்தால் இன்றையத் தினம் பல்கலைக் கழகத் துணைவேந்தராகவே வந்திருப்பார்.

கலைஞர் இன்று முதலமைச்சராக இருக்கிறார் என்றால், அவர் செய்த தியாகங்களைத் திரும்பிப் பார்க்கவேண்டும்.

எம்.ஜி.ஆர்.அவர்களால் அண்ணா அவர்கள் எத்தனை முறை குறைபட்டிருக்கிறார் என்பதை மறந்துவிட முடியாது; போராட்டங்களுக்கும் -- சிறை செல்வதற்கும் கலைஞர்களுக்கும், வேறு சிலருக்கும் அண்ணா அவர்கள் விதிவிலக்குத் தந்ததே எம். ஜி ஆர். அவர்களுக்காகத்தான்!

1964-ல் அண்ணா மேலவையில் இருந்தார்; அப்போது மேலவையில் ஒரு இடம் காலியாக இருந்தது; அதற்காக அண்ணாவோடு 30 ஆண்டுக் காலம் பழகிய சி. வி. இராசகோபால் -- அந்த இடத்திற்கு சி.பி.சி. அவர்களை போட்டதற்காக வருத்தப்பட்டு உண்ணாநோன்பு இருந்தார்; அண்ணா வருத்தப்பட்டாலும் அதைப் பொறுத்துக் கொண்டார்; ஆனால் எம். ஜி. ஆர். தனது பதவியை இராஜினாமா செய்தார்; எதிர்க்கட்சியாக நாம் இருந்தபோது நமக்குக் கிடைத்த 5 இடங்களில் ஒன்றை எம். ஜி. ஆர். இராஜினாமா செய்தார்; அண்ணா அந்த வருத்தத்தில், சாப்பிடாமலே கூட இருந்தார்.

அப்போது அண்ணா அவர்கள் சொன்னார் -- 'நான் எவ்வளவோ நம்பிக்கையோடு அந்தஇடத்தை எம்.ஜி. ஆருக்குத் தந்தேன்; அவர் இராஜினாமா செய்துவிட்டாரே; இதைவிட எனக்கு வேறென்ன மானக்கேடு வேண்டும்' என்றார்!

அப்போது நான் சொன்னேன் -- இதுவரையில் நாம்முஸ்லிம் லீக் -- கம்யூனிஸ்டு ஆகிய கட்சிகளுக்குத்தான் இடம் தந்திருக்கிறோம்; எம். ஜி ஆர்., காங்கிரசுக்கே இடம் தந்துவிட்டார்' என்று!

இப்படி எத்தனை முறையோ அண்ணா அவர்கள் மனம் புண்படும்படி எம். ஜி. ஆர். நடந்து கொண்டிருக்கிறார்!

ஆலந்தூரில் பேசிய எம். ஜி. ஆர். -- என்னைப் பக்கத்தில் வைத்துக்கொண்டே 'நான்தான் தி. மு. க.--தி. மு. க.தான் நான்' என்று பேசினார்; 'நானென்ன-- இவர்கள் பார்த்து இந்தக் கட்சிக்கு வந்தவனா? நான் சொல்வதுபோல் மற்றவர்களுக்கும் தைரியமிருந்தால் சொல்லட்டும்! என்கிறார்!

எதைப் பேசவும் தைரியம் மட்டும் அடிப்படை அல்ல - அறியாமையாலும் பேசலாம்!

அண்ணா அவர்களே 'நான்தான் தி மு. க.' என்று கூறவில்லை; 'எனது பேச்சின் அழகு நாவலரிடம் இருக்கிறது; 'உணர்ச்சி கலைஞரிடம் இருக்கிறது; தமிழ் நடை அன்பழகனிடம் இருக்கிறது' என்றுதான் பேசினாரே தவிர, 'நான்தான் தி மு. க.' என்று கூறவில்லை.

கலைஞர் சொல்லக் கூசுவதை-- நாவலர் சொல்ல நினைக்காததை -- அண்ணாவே சொல்லாததை இவர் சொல்கிறார்!

தி. மு. கழகம் இவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமாம்! அண்ணாவின் உடம்பாக இருப்பது -- அண்ணாவின் மறு உருவமாக இருப்பது தி மு. கழகம்! அண்ணாவே மன்னிப்புக் கேட்பதாக இருந்தால்தான், தி. மு. கழகம் மன்னிப்புக் கேட்கும்!"

என். வி. நடராசன்

தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"அண்ணா அவர்களால் ஆளாக்கப்பட்ட நமக்கெல்லாம், எப்போதுமே எதிர்ப்புக்களைச் சந்திக்கின்ற நேரத்தில் உற்சாகமிருக்கும்; ஆனால் நம்முடனேயே இருந்து -- நம் முதுகில் குத்துகின்றவர்களை இப்போதுதான் அடையாளம் கண்டு கொண்டோம்!

'அண்ணாவைவிட நமக்குத்தான் பலம் அதிகம்' என்ற தவறான நினைப்பாலேதான் சம்பத் கெட்டார்; போகின்ற கூட்டத்திலே எல்லாம், 'அண்ணாவுக்குக் கூட்டம் அதிகமா -- எனக்குக் கூட்டம் அதிகமா' என்று கேட்டார்; அந்த அசட்டுத் தைரியத்தில் கழகத்தை விட்டு விலகி -- இப்போது இருக்குமிடமே தெரியாமல் போய்விட்டார்! அப்படிப்பட்ட தைரியம்தான் இப்போது எம். ஜி. ஆருக்கு வந்திருக்கிறது!

'நடவடிக்கைதான் எடுக்கப்பட்டுவிட்டதே' என்று இல்லாமல், இனிமேல்தான், கிளைக் கழகச் செயலாளர்களும் -- வட்டக் கழகச் செயலாளர்களும் -- மாவட்டக் கழகச் செயலாளர்களும் விழிப்புடனிருந்து தீவிரமாகப் பணியாற்ற முன்வரவேண்டும்.

பேரறிஞர் அண்ணா அவர்களாலும் -- கலைஞர் அவர்களாலும் -- நாவலர் அவர்களாலும் தி. மு. கழகம் பெற்றுள்ள பெருமை நீங்கள் அறியாதது அல்ல; அப்படிப்பட்ட கழகத்திற்குத் தனி ஒருவரால் குறைவு நேரவிடாமல் பாதுகாப்பது உங்கள் கடமையாகும்.

அண்ணா அவர்களை நமக்கு அளித்த தந்தை பெரியார் அவர்கள் கூறியும்கூட எம். ஜி ஆர். ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், 'அரசியலில் அவர் இன்னும் பக்குவப்படவில்லை' என்றுதான் அர்த்தம்!

அண்ணா அவர்கள் நம்மிடையே உண்டாக்கிய பாசம் பிணைப்புமகத்தானது; அதற்கு ஊறு நேரிடாமல காப்போம்! கழகத் தலைவர் கலைஞரின் வழிநடப்போம்!"

சத்தியவாணிமுத்து

அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தி. மு. கழகத்தை அழிக்க வேண்டும் என எம். ஜி ஆர். நினைக்கிறார்; ஆனால் தன்னை அறியாமல் கழகத்தை அழிப்பதாக எண்ணிக் கொண்டு அவர் தன்னையே அழித்துக் கொள்கிறார்!

சம்பத் அவர்கள் கட்சியிலிருந்து வெளியேறியபோது, கட்சியைக் காப்பாற்ற வேண்டுமென்று நானும் -- மற்றவர்களும் சம்பத்திடம் சமாதானத்திற்குச் சென்றோம்.

அதைப்போல் இப்போதும் கழகத்திலிருந்து எம். ஜி ஆர். இப்படி தவறாகப் பேசி -- செயற்குழுவிலும் -- பொதுக்குழுவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டபோது -- தாம் பேசிய பேச்சுக்கு வருத்தம் தெரிவித்தால் என்ன என்று கேட்க நானும் -- மற்றவர்களும் சென்றிருந்தோம்.

'அமைச்சர்களைப் பற்றி மட்டுமல்ல -- கழகத்தின் செயலாளர்களைப் பற்றியெல்லாம் குற்றஞ் சாட்டினீர்களே -- யாரை நீங்கள் குறைகூறாமல் விட்டீர்கள்? மறுபடியும் கட்சிக்கு வருபவராக இருந்தால் இப்படியெல்லாம் பேசுவீர்களா?' என்று நான் எம்.ஜி ஆரைக் கேட்கிறேன்.

கழகத் தலைவரும் -- பொதுச்செயலாளரும், 'கதவு திறந்தே இருக்கிறது' என்றார்கள்; வருத்தம் தெரிவித்திருந்தால் என்ன? பெரியாரே வருத்தம் தெரிவிக்கச் சொன்னாரே -- தெரிவித்திருந்தால்தான் என்ன?

எங்களைப் பொறுத்த வரையில், கழகம்தான் பெரிது; எம். ஜி. ஆர். அல்லர்!

'கழகத்தின் கிளைகளையெல்லாம் மாற்றுங்கள்' என்கிறார்; அதை மாற்ற நீங்கள் யார்? யாரால் கழகத்தை, 'ரசிகர் சங்க'மாக மாற்றிவிட முடியும்?

கழகத்தைக் கலைக்க முயற்சி செய்வதன்மூலம், தன்னையே அழித்துக்கொள்ள நினைக்கிறார் அவர்!

நாங்களெல்லாம் செத்து மடிவோமே தவிர, கழகத்தை அழிய விடமாட்டோம்!

யார் நினைத்தாலும் கழகத்தை அழிக்க முடியாது; ஆகவே, கழகம் எடுத்த முடிவுகளுக்கேற்ப நாமெல்லாம் நடக்க வேண்டும்."

க. இராசாராம்

கழகத் துணைப் பொதுச்செயலாளர் க. இராசாராம் அவர்கள் பேசியதாவது:—

"கழகத்தைவிட்டு சம்பத் விலகிய போது மாற்றுக் கட்சிகளும் -- பல பத்திரிகைகளும் அதனைப் பெரிதுபடுத்தின; ஆனால் அவரது கதை உங்களுக்குத் தெரியும்.

அரசியல் வியாபாரத்திற்கு வந்த அவர், அது நடக்காமல் இப்போது கோழி வியாபாரத்தில் இறங்கியிருக்கிறார்.

1971-ல் நடந்த பொதுத்தேர்தலில் நம்மை ஒரு சாதாரண நகைச்சுவை நடிகர் எதிர்த்தார்; அவரை ஜனசங்கத்தினர் புதுடில்லிக்கே அழைத்துப் பேசச் சொன்னார்கள்; என்ன நடந்தது? அவரால் வெற்றி பெறவா முடிந்தது? என்ன ஆனார் அவர்? எம் ஜி ஆர். இதையெல்லாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

இன்றைக்குக் காமராசரின் அரவணைப்பையும் -- பக்தவத்சலத்தின பாசத்தையும் -- சுப்பிரமணியத்தின் அன்பையும் பார்க்கின்றபோது அவருக்குச் சற்று சுறுசுறுப்பாகத்தான் இருக்கும்; ஆனால், அந்தக் கிறுகிறுப்பு நீடிகுமானால் நிச்சயம் ஆபத்தாகிவிடும்.

'இந்து' பத்திரிகையில் இதுபற்றி ரிஷாக்காரரைக்கூடப் பேட்டி கண்டு போட்டிருக்கிறார்கள்!

சத்யா ஸ்டுடியோவில் கூட்டம் வழிகிறதாம் -- இதெல்லாம் நிரந்தரமானதா?

எம். ஜி. ஆர்.மீது எந்தவிதமான வெறுப்பும் எங்களுக்கில்லை; ஆனால், அவரைவிட கழகத்தை நாங்கள் மேலாக மதிக்கிறோம்.

ரோமாபுரி வரலாற்றில் ஒரு சம்பவம் -- 'நான் சீசரை நேசிக்கிறேன்; ஆனால் அதைவிட மேலாக ரோமாபுரியை நேசிக்கிறேன்' என்று புருட்டஸ் சொல்கிறான்.

அதேபோல்தான் நாங்கள் எம். ஜி ஆரை நேசிக்கிறோம்; ஆனால் அவரினும் மேலாகக் கழகத்தை நேசிககிறோம்.

எம். ஜி ஆர். ஒரு தனி மனிதர்; கழகமோ இலட்சோபலட்சம் மக்களால் உருவாக்கப்பட்டது! கழகம் அழிந்தால் தமிழகத்திற்கு வேறு வழி கிடையாது!

இதையெல்லாம்மனதிற்கொண்டுதான் -- கழகத்தின் நலனைக் கருதித்தான், எம். ஜி ஆர்.மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது; சனநாயக ரீதியில் எடுக்கப்பட்டிருக்கும் இந்த முடிவை நாடு ஏற்கும் -- நல்லவர்கள் ஏற்பார்கள்."

மேயர் எஸ். முத்து

மதுரை மேயர் எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள் பேசியதாவது:—

"கழகத்தை ஒழித்துக்கட்டும் வேலையில் ஒரு தனி மனிதர் இறங்கியிருக்கிறார்; அவரால் இப்படி ஒரு நிலை வருமென்று எனக்கு பத்தாண்டுகளுக்கு முன்பே தெரியும்; 'அப்படித் தெரிந்துமா தங்கவாள் கொடுத்தாய்' என்று கேட்கலாம்; 'தமிழ் மக்களுக்கு அவர் பயன்படுவார்' என்றுதான் கொடுத்தேன்; அவரை நேசித்து நான் கொடுக்கவில்லை--இந்த நாட்டை நேசித்ததால்தான் கொடுத்தேன்.

'நான்தான் கழகம் -- கழகம் என்றால் நான்தான்' என்று எம். ஜி ஆர். சொல்லியிருக்கிறார். கழகத்தை உருவாக்கிய அண்ணாவே அப்படிச் சொன்னதில்லை; கலைஞரால்கூட அப்படிச் சொல்ல முடியாது; கழகம் மக்களுடையதாகிவிட்டது.

நம்மிடம் அவர் கணக்குக் கேட்கிறார்; எந்தக் கட்சியிலிருந்து யார் விலகினாலும், இந்தக் கேள்வியைக் கேட்பது வழக்கம்.

காங்கிரசை விட்டு வெளியேறிய போது பெரியாரிடம் கணக்குக் கேட்கப்பட்டது; சம்பத் நம்மை விட்டு விலகியபோதும் நாவலரைப் பார்த்துக் கணக்குக் கேட்டார்: காங்கிரசைவிட்டு சுப்பிரமணியம் விலகியபோது காமராசரிடம் கணக்குக் கேட்டார்; இப்போது நம்மைப் பார்த்து எம். ஜி. ஆர் கணக்குக் கேட்கிறார்!

24 மணி நேரமும் கழகத்திற்காகவே பணியாற்றுகிறார் கலைஞர்; அதனால்தான் நாங்களெல்லாம் அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிறோம்; அவரது படத்தை உடைக்கிறார்கள் எம். ஜி. ஆர். சீடர்கள் -- கழகக் கொடியை வெட்டுகிறார்கள்; அவர்களெல்லாம் கழகத் தோழர்கள் தானாம்; அவர் சொல்கிறார் -- யாராவது நம்புவார்களா?"

எஸ். எஸ். தென்னரசு

முகவை மாவட்டச் செயலாளர் எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி. பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"கழகக் கட்டுப்பாட்டை மீறி கழகத்தின் மாவட்ட -- வட்டச் செயலாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள் ஆகியோர் மீது தவறான எண்ணத்தை உருவாக்கிய எம். ஜி. ஆர். மீது உரிய நேரத்தில் நல்ல நடவடிக்கையை எடுத்த கழகத் தலைவரையும், பொதுச்செயலாளரையும் மாவட்டக் கழகச் செயலாளர்கள் -- தொண்டர்கள் சார்பில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

துணிவோடு சட்டமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கு நின்று வெற்றி பெற்றதுபோல், சரியான நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கழகத்துக்காரர்களை சாடுகிற எம். ஜி. ஆரைக் கேட்கிறேன் -- காஷ்மீருக்குச் சென்றபோது தலைமையமைச்சரைச் சந்தித்தீர்கள்; திரும்பி வரும் போதும் சந்தித்தீர்கள்; என்ன பேசினீர்கள் என்பதை எங்கள் பொதுக் குழுவில் சொன்னீர்கள்? உங்கள்மீது எங்களுக்கு சந்தேகம் ஏற்படாதா?

'அரேபிய நாட்டு அத்தருக்கு தனியான மணம் உண்டு' என்பார்கள்; ஏனென்றால், ஆயிரம் ரோஜாவைப் பிழிந்தால்தான் ஒரு சொட்டு அத்தர் கிடைக்குமாம்!

ஆயிரம் ரோஜாவிலிருந்து எடுக்கப்படும் ஒரு சொட்டு அத்தர் போல, 13,000 தொண்டர்களின் குடும்பங்களின் குரலாக இருப்பது கழகம்; அப்படிப்பட்ட கழகத்தை எந்தத் தனிப்பட்ட மனிதனும் -- கோடீசுவரனும் -- செல்வாக்குப் படைத்தவனும் அழிக்க முடியாது! கழகத்தின் மணத்தை மாற்றிவிட முடியாது!"

பொதுக்குழு தீர்மானம்

புதுவை அமைச்சர் வரவேற்பு

புதுவை, அக். 28—

புதுவைக்கு முழு மாநிலத் தகுதி தரவேண்டுமென்ற கோரிக்கைக்கு ஆதரவு தருவதென்ற தி. மு. க. பொதுக்குழு முடிவைப் புதுவை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் வி. சுப்பையா வரவேற்றார்.

புதுவை சட்டமன்றம் கடந்த மார்ச் மாதக் கூட்டத்தில், மத்திய அரசின் நேரடி ஆட்சியிலுள்ள புதுவை—காரைக்கால் — மாகி—ஏனம் பகுதிக்கு மாநில தகுதியும், அரசியல் அதிகாரங்களும் வழங்குமாறு மத்திய அரசைக் கோரும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருப்பதை அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

'அம்கோ' பாட்டரி தொழிற்சாலை மூடப்பட்டது

தொழிலாளர் வன்முறையில் இறங்கியதன் விளைவு

பெங்களூர், அக். 18—

பெங்களூரில் 'அமகோ' பாட்டரி நிறுவனத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களை யடுத்து அந்நிறுவனம் மூடப்பட்டுவிட்டது.

"நிறுவனத்தின் சொத்துக்களின் பாதுகாப்புக்குத் தொடர்ந்து அச்சுறுத்தல் காணப்படுவதால், சுமூக நிலை திரும்பும் வரையில் நிறுவனத்தை மூடிவிடுவதைத் தவிர வேறு வழியில்லை" என்று அந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் அறிவித்திருக்கிறார்.

பள்ளிப் பிள்ளைகட்குத் தொழிற் பயிற்சி

மத்திய அரசின் திட்டம்

சேவாகிராமம், அக். 18—

பள்ளிக்கூடங்களில் முதலாவது வகுப்புமுதல் 8-வது வகுப்புவரையில் மாணவர்களுக்குத் தொழிற் பயிற்சி கிடைக்கச் செய்வதற்கு மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது; ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்தகவலை மத்திய கல்வித் துறைத் துணையமைச்சர் டி. பி யாதவ், தேசியக் கல்வி பற்றிய அனைத்திந்திய கருத்தரங்கில் உரையாற்றுகையில் தெரிவித்தார்; இத்தொடர்பில் மேலும் அவர் கூறியதாவது:—

"விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் தக்க நூலறிவு பெறுவதுடன், இத்துறைகளில் உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய திறமையை மாணவர்களிடத்தில் உண்டாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்; இந்தத் திட்டத்தின் மூலம் 10 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்கள், தாங்கள் படிக்கும்போதே ஓரளவு ஊதியமும் சம்பாதிக்க வழி ஏற்படும்.

இத்தகைய தொழிற் பயிற்சி வகுப்புக்களுக்குச் செல்லும் ஆசிரியர்கட்குப் பயிற்சியளிக்கவும் -- தேவையான கருவிகளை வாங்கவும் ரூ 170 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது."

தெ. ஆ. மாவட்ட தி. மு. க. அவசரக் குழுக் கூட்டம்

"தென்னாற்காடு மாவட்ட தி.மு. கழக அவசரக் குழுக் கூட்டம் 21-10-72 பிற்பகல் 1-30 மணியளவில் விழுப்புரம் நகராட்சிப் பயணியர் விடுதியில் அவைத் தலைவர் எஸ். பி. பச்சையப்பன் தலைமையில் நடைபெறும்; அதுபோது, அண்மையில் பொதுக்குழு நிறைவேற்றிய தீர்மானங்கள்--எதிர்கால ஆக்கப் பணிகள் குறித்து ஆராயப்படும்; மாவட்டப் பிரதிநிதிகள் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று மாவட்டச் செயலாளர் எம். செல்வராசு அறிவிக்கிறார்.

திருமணம்

சென்னை--வண்ணைப் பகுதி முன்னாள் செயலாளர் பி. கே. மாரியப்பன் அவர்களின் மகள் செல்வி: தேன்மொழிக்கும்— செல்வன்: பழனிச்சாமிக்கும் 20-10-72 காலை 9-மணியளவில் சென்னை- இராயபுரம், ஆதம் சாயபு தெரு, 59-எண்ணுள்ள இல்லத்தில் அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்; சட்டப் பேரவை—மேலவை உறுப்பினர்கள், மாநகராட்சி உறுப்பினர்கள் மற்றும் கழகத் தோழர்கள் வாழ்த்துரை வழங்குவர்.

பொதுக்குழுத் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம்

அமைச்சர்கள்--முன்னணிச் சொற்பொழிவாளர்கள் பங்கேற்கும் ஊர்கள்

தி. மு. க. தலைமைச் செயற்குழு – பொதுக்குழு முடிவுகளைப் பொதுமக்களுக்கு எடுத்து விளக்கும் பொருட்டு 22–10–72 ஞாயிற்றுக்கிழமை நாடெங்கும் பொதுக்கூட்டங்கள் நடத்தவேண்டும் – என்று கழகம் மேற்கொண்டுள்ள முடிவினையொட்டி அன்று கூட்டம் நடைபெறும் ஊர்கள் – கூட்டத்தில் கலந்துகொள்ளும் சொற்பொழிவாளர்கள் விவரம் வெளியிடப்பட்டுள்ளது. அமைச்சர் பெருமக்கள் – கழக முன்னணிச் சொற்பொழிவாளர்கள் ஆகியோருடன் அந்தந்த ஊர்க் கூட்டங்களில் அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டச் செயலாளர்கள், சட்டமன்ற – நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொள்வர். கூட்டம் நடைபெறும் இடங்களும் – கலந்து கொள்ளும் சொற்பொழிவாளர்களும் வருமாறு:--

தஞ்சை மாவட்டம்

தஞ்சை நகரம் ...	அமைச்சர் சத்தியவாணிமுத்து, இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ.
மாயூரம் ...	தில்லை வில்லாளன் எம்.பி. வலம்புரிஜான்
பட்டுக்கோட்டை ...	கே. விநாயகம், சிவகங்கை சேதுராசன்
திருவாரூர் ...	செல்வி தமிழரசி
நாகப்பட்டினம் ...	பி. ஆர். இலட்சுமிகாந்தன்
மன்னார்குடி, நீடாமங்கலம் ...	சக்தி கதிர்வேலு
பேராவூரணி ...	தங்கப்பாண்டியன் எம்.எல்.சி.
திருக்காட்டுப்பள்ளி ...	நா. கணபதி எம்.எல்.ஏ.
திருவையாறு ...	திருவை அண்ணாமலை
வடுவூர் ...	கு. பாலகிருஷ்ணன் எம்.எல்.ஏ.
கந்தர்வக்கோட்டை ...	செல்வி கஸ்தூரி
திருவோணம் ...	பொன். சொக்கலிங்கம் எம்.எல்.ஏ.
திருப்பனந்தாள், ஆடுதுறை ...	வி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ.
மதுக்கூர் ...	திருச்சி சௌந்தரராசன்
குடந்தை ...	ரஹ்மான்கான்
சீர்காழி ...	கோடம்பாக்கம் குமார்

வட ஆற்காடு மாவட்டம்

வேலூர் ...	அமைச்சர் ப. உ. சண்முகம்
அரக்கோணம் ...	செல்வி சற்குணம் எம்.சி., கவிஞர் குடியரசு
ஆம்பூர் ...	ஜின்னா பி.ஏ.,பி.எல்., என். வி. என். செல்வம் பி.ஏ.,
செய்யாறு ...	புலவர் கோவிந்தன் எம் எல்.ஏ., என். வி. என். சோமு பி ஏ.,பி எல்.
திருவண்ணாமலை ...	புதுவை அமைச்சர் இராமசாமி
திருப்பத்தூர் ...	டி. கே. பொன்னுவேலு எம்.எல்.சி
ஆரணி ...	போலீஸ் கண்ணன்

செங்கற்பட்டு மாவட்டம்

செங்கற்பட்டு, மதுராந்தகம், காஞ்சிபுரம் ...	மாண்புமிகு முதலமைச்சர்
திருவொற்றியூர் ...	அமைச்சர் செ. மாதவன், வழக்கறிஞர் பி. டி. சரசுவதி
மீஞ்சூர் ...	நன்னிலம் நடராசன், அலமேலு அப்பாதுரை
திருத்தணி ...	கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ.
திருவள்ளூர் ...	கோவை செழியன் எம்.எல்.ஏ. நாவளவன், கணேசமூர்த்தி

கோவை மாவட்டம்

கோவை நகரம், பொள்ளாச்சி...	மாண்புமிகு நாவலர்
மேட்டுப்பாளையம் ...	அமைச்சர் எஸ்.ஜே சாதிக்பாட்சா
உடுமலைப்பேட்டை ...	அமைச்சர் ஓ. பி. இராமன்
ஈரோடு ...	அமைச்சர் மு. கண்ணப்பன்
வேட்டைக்காரன்புதூர் ...	சுப்பையன் பி,ஏ.பி.எல். ஏ. எஸ். மணி
கோட்டூர் ...	அரங்கநாயகம் பி.ஏ.பி.எல்.
நெகமம் ...	திருமதி பழனியம்மாள் எம்.எல்.ஏ.
கிணத்துக்கடவு ...	க. அன்பரசு

நீலகிரி மாவட்டம்

உதகை, குன்னூர் ...	அமைச்சர் சாதிக் பாட்சா

மதுரை மாவட்டம்

மதுரை ...	பேராசிரியர் க. அன்பழகன், மேயர் எஸ். முத்து எம்.எல்.சி. இராஜாங்கம் எம்.பி.
திண்டுக்கல் ...	மு. இராமநாதன் எம்.எல்.சி.
பழனி ...	பி. எஸ். மணியம் எம்,எல்.ஏ.
பெரியகுளம் ...	மா. தங்கவேலர், காதர்சா பழனி, கே. கிருஷ்ணமூர்த்தி

திருச்சி மாவட்டம்

திருச்சி நகரம் ...	அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் மா. முத்துசாமி எம்.பி.
கரூர் ...	குளித்தலை முத்துகிருஷ்ணன் ஜி பராங்குசம் எம்.எல்.சி. பரமசிவம் சண்முகம்
துறையூர் ...	சுப்ரவேலு எம்.பி., வீரய்யா எம்.பி.
அரிமழம் ...	முத்துக்கலிங்கன் எம். சொக்கலிங்கம்
மணப்பாறை ...	து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ. வெ. மணிமொழி
லால்குடி ...	புதுவை அமைச்சர் ஆறுமுகம்

முகவை மாவட்டம்

இராமநாதபுரம் ...	அமைச்சர் மன்னை நாராயணசாமி எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி.
காரைக்குடி ...	எல். கணேசன் எம்.எல்.ஏ.
திருவில்லிபுத்தூர் ...	எம். சி. பாலன் எம்.பி.
விருதுநகர் ...	காளிமுத்து எம்.எல்.ஏ.
மானாமதுரை ...	காவேரிமணியம் எம்.எல்.ஏ.
அருப்புக்கோட்டை ...	திருஞானம் எம்.எல்.சி.

நெல்லை மாவட்டம்

நெல்லை ...	டி. கே. சீனிவாசன் எம்.பி. அழகியநம்பி
சங்கரன்கோவில் ...	கந்தப்பன் எம்.எல்.ஏ.
தூத்துக்குடி ...	தா. கிருட்டிணன் எம்.பி.
விக்கிரமசிங்கபுரம் ...	கோவை மோகன், நெல்லை மாறன்
தென்காசி ...	ஆலடி அருணா எம்,எல்.ஏ.
வள்ளியூர் ...	கே. வி சுப்பையா எம்.எல்.ஏ. சதாசிவம் பி.ஏ பி.எல்.
கோவில்பட்டி ...	ராசாங்க சீனிவாசன் எம்.எல்.ஏ.
திருவைகுண்டம் ...	இரணியல் ரவி
உடன்குடி ...	அ. திராவிடமணி

குமரி மாவட்டம்

நாகர்கோவில் ...	ஏ. வி. பி. ஆசைத்தம்பி, திரவியம்

சேலம் மாவட்டம்

சேலம் ...	அமைச்சர் இராமச்சந்திரன், ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.பி.
நாமக்கல் ...	துரைமுருகன் எம்.எல்.ஏ.
இராசிபுரம் ...	காட்டூர் கோபால் எம்.எல்.சி.
ஆத்தூர் ...	கோபி ஜி. என். இராசு
மேட்டூர் ...	வி. எஸ். கோவிந்தராசன்
ஓமலூர் ...	ஜார்ஜ் சோமகன் எம்.எல்.சி.
திருச்செங்கோடு ...	வி. வி. சாமிநாதன் எம்.பி.
இடைப்பாடி ...	புலவர் அறிவுடைநம்பி எம்.எல்.சி

தர்மபுரி மாவட்டம்

தர்மபுரி ...	முரசொலி மாறன் எம்.பி. எஸ். எஸ். மாரிசாமி எம்.பி.

புதுவை மாவட்டம்

புதுவை ...	அமைச்சர் க. இராசாராம் புதுவை முதல்வர்

தென்னாற்காடு மாவட்டம்

கடலூர், நெய்வேலி ...	அமைச்சர் என். வி. நடராசன்
விருத்தாசலம் ...	அமைச்சர் ஆதித்தனார்
சிதம்பரம் ...	கேரள சுந்தரம்
கள்ளக்குறிச்சி ...	ஆர். ஆர். முனுசாமி எம்.எல்.ஏ. புலவர் பொன்னிவளவன்
திருக்கோவிலூர் ...	சண்முகநாதன் பி.ஏ., பி.எல்.
பண்ணுருட்டி ...	இரா. சனார்த்தனம் எம்.ஏ.
திண்டிவனம் ...	வை. பாலசுந்தரம் எம்,எல்.ஏ. அமுதா ராகவன்

உற்பத்தியைப் பெருக்கச் சட்ட விதி

தமிழகத் தலைமை நீதிபதியின் கருத்து

கோவை, அக். 18—

"தொழிலாளர்களுக்கும் -- நிர்வாகிகளுக்கும் இடையே நல்லுறவு நிலவ வேண்டியதன் இன்றியமையாமையைக் குறித்து மட்டும் தொழிலாளர் சட்டங்கள் வற்புறுத்தினால் போதாது; உற்பத்தியைப் பெருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைம் மற்றியும் அவை வலியுறுத்த வேண்டும்; ஆனால் தற்போது உள்ள தொழிலாளர் சட்டங்கள் இந்த முக்கிய அம்சத்தைப் புறக்கணிக்கின்றன"

என்று சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி கே. வீராசாமி கோவையில் இந்திய வர்த்தகக் கழகம் அளித்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில் சுட்டிக்காட்டினார்; அவர் மேலும் கூறியதாவது:—

"வர்த்தகக் கழகங்கள் -- வழக்கறிஞர் சங்கங்கள் போன்ற பொது நிறுவனங்கள், புதிய மசோதாக்களை விவாதிப்பதில் ஆர்வம் காட்ட வேண்டும்; இதன்மூலமாக நியாயமான கொள்கைகளை அரசு உருவாக்குவதற்கு உதவவேண்டும்.

"நீதித் துறையில் ஊழல்கள் நடப்பதாகப் புகார்கள் எழுகின்றன; குற்றம் செய்யும் அதிகாரிகள் கட்டாயம் தண்டிக்கப்படத்தான் வேண்டும்; ஆனால் அதற்காக அவர்கள் மீது ஆதாரமற்ற புகார்களைக் கூறக் கூடாது."

நரிக் குறவர்களுக்கு விவசாயத் திட்டம்

கப்மாளப்பூண்டி, அக். 17—

உத்தரமேரூர் ஊராட்சி ஒன்றியம் வயலூர் கிராமத்தில் வாழும் நரிக் குறவர்களுக்கு வேளாண்மைத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.

செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.என். கிருஷ்ணமூர்த்தி மின்சார மோட்டார் பம்புசெட்டை இயக்கி வைத்தார்.

பொறுக்கு விதைகளையும், இரசாயன உரங்களையும் நரிக் குறவர்களுக்குக் கொடுத்து விவசாயத்திட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசினார்.

'கணக்குப் பார்க்க விரும்பவில்லை— கழகத்திலிருந்தே கணக்குத் தீர்த்துக்கொள்ள விரும்பினர்'

எம்.ஜி.ஆர். போக்கு—கழகத் தலைவர் கலைஞர் விளக்கம்

சென்னை, அக். 19—

"சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், எம்.ஜி. ஆர். தி.மு. கழகத்திலிருந்து கணக்குத் தீர்த்துக்கொள்ள விரும்பினாரே தவிர, கணக்குப் பார்க்க விரும்பவில்லை.

"கழகத்தில் தன்னைத் தவிர தூய்மையானவர்களே கிடையாது என்றும், 18 000 கிளைக் கழகச் செயலாளர்களும் தொண்டர்களும் தூய்மையற்றவர்கள் என்றும் குற்றஞ்சாட்டுவது, தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்கின்ற காரியமாகும்"

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், நேற்று செய்தியாளர்களிடம் விளக்கிக் கூறினர்; செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும்—கலைஞர் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:—"அண்ணா தி. மு. கழகம்—என்ற பெயரில், எம். ஜி. ஆர். புதிய கட்சி தொடங்கியிருப்பதாகவும்—தனது ஆதரவாளர்கள் நிர்ப்பந்தப்படுத்துவதால் புதிய கட்சி தொடங்கியிருப்பதாகவும்—தமிழ்நாட்டில் 18 000 கிளைக் கழகங்கள் இருக்கின்றன என்றும், ஒவ்வொரு கிளைக் கழகத்திற்கும் 3 எம். ஜி. ஆர். மன்றம் என்று கணக்கிட்டால்குறைந்தபட்சம் 30,000 கிளைகளாவது புதிய கட்சிக்கு துவக்கத்தில் இருக்கும் என்றும், சட்டமன்றத்தில் எதிர்க் கட்சியில் உட்கார எண்ணியிருப்பதாகவும் அறிவித்திருக்கிறார்; தி. மு கழகக் கொடிக்கு நடுவில் அண்ணாவின் படம் கொண்ட புதிய கொடி மற்றும் அறிவித்திருக்கிறார்; அக். 22-ந்தேதி சென்னையிலும், 23-ந் தேதி காஞ்சிபுரத்திலும் இந்தக் கட்சி தொடங்கப்பட இருப்பதாகவும் சொல்லியிருக்கிறாரே?"

பதில்:—"அவரைக் கழகத்திலிருந்து தற்காலிகமாக விலக்கி வைத்துப் பொதுச்செயலாளர் சமாதான விளக்கம் கேட்டிருக்கிறார்; ஆனால் இப்போது அவர் அதற்கு விளக்கம் அளிப்பதற்கு முன்பே கழகத்திலிருந்து தாம விலகிவிட்டதாக அறிவித்திருக்கிறார்; அவர் என்ன நினைத்தாரோ—என்ன நடக்கவேண்டுமென்று திட்டமிட்டாரோ அது நடந்திருக்கிறது; கழகம் அவர் மீது ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து விளக்கம் கேட்க முன்வந்தது என்பதை இனிமேலாவது—இதுவரையில் இதுபற்றி விளக்கம் அறியாமல் இருந்தவர்கள் விளங்கிக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்."

கேள்வி:—"கழகக் கொடியை அவர் பயன்படுத்திக்கொள்ளலாமா?"

பதில்:—"அதுபற்றி இப்போது ஒன்றும் சொல்வதற்கில்லை."

கேள்வி:—"புதிய கட்சியில் போய்ச் சேரும் தி. மு. க.-வினர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?"

பதில்:—"அப்படிச் சேருகின்றவர்கள் உண்மையான தி. மு. கழகத்தினராக இருக்கமாட்டார்கள்; அவர்கள் வேறு ஒரு கட்சிக்கு விரைவில் போகின்ற பாலமாகத்தான் அந்தப் புதிய கட்சி இருக்கும்."

கேள்வி:—"மதுவிலக்கு மற்றும் அண்ணாவின் கொள்கைகளே இருக்கும என்றும், சர்வாதிகாரக் கொள்கை இருக்காதென்றும் அவர் கூறியிருக்கிறாரே?"

பதில்:—"அவைகளுக்கெல்லாம் பதில் சொல்ல விரும்பவில்லை; ஆனால், தி.மு. கழகம் சனநாயக இயக்கமா—சர்வாதிகார இயக்கமா என்பதுபற்றி மக்களுக்குத் தெரியும்; நானோ—நாவலரோ—பேராசிரியர் அன்பழகனோ—என். வி. நடராசனோ—இராசாராமோ—சத்தியவாணி முத்துவோ மற்றும் கழகத்தில் இருக்கின்ற முன்னணித்தலைவர்களோ—எந்த நேரத்திலும் எந்த முடிவையும் கலந்து யோசித்துத்தான் எடுத்திருக்கிறோம்; இது அண்ணா காலத்திலிருந்து தி. மு. கழகத்தில் வளர்ந்துவருகின்ற சனநாயக மரபு; தனியாக ஒருவர் பொதுக்கூட்டத்தில் ஒருமுடிவை அறிவித்துவிட்டு, 'இதைப் பொதுக்குழு ஏற்றுக்கொள்ளாவிட்டால் நான் கட்சியைவிட்டு வெளியேறிப் பொதுமக்களை சந்திப்பேன்' என்று சொல்வது எந்தவித சனநாயகம் என்பதை நாங்கள் எந்தப் புத்தகத்திலும் படிக்கவில்லை."

கேள்வி:—"1971 தேர்தலுக்குப் பிறகு நேபாளம் சென்று ஓய்வு எடுத்துவிட்டுத் திரும்பிய எம். ஜி. ஆர்., அமைச்சர்கள் அன்பழகன்—அன்பில் தர்மலிங்கம்—ப. உ. சண்முகம் ஆகியோரைச் சந்தித்து, 'கழகக் கணக்கு விவகாரங்கள் என்ன—இதை அளிக்காவிட்டால் இராஜினாமா செய்துவிடுவேன்' என்று சொன்னாராமே?'

பதில்:—"இதோ இருக்கிறாரே—அவரையே கேளுங்கள் (அருகிலிருந்த அமைச்சர் அன்பழகனைக் காட்டுகிறார்).

பேராசிரியர் அன்பழகன்:—"அவர் என்னை அப்படிச் சந்திக்கவுமில்லை—கழக விவரம் பற்றி என்னிடம் அவர் பேசியதும் கிடையாது."

கலைஞர் (தொடர்ந்து):—"ஒன்றிரண்டு கட்டங்களைத் தவிர எல்லாச் செயற்குழு—எல்லா பொதுக்குழுக் கூட்டங்களிலும் எம். ஜி ஆர். கலந்துகொண்டிருக்கிறார்; பொதுச்செயலாளரால் அதிகாரம் வழங்கப்பட்டு—'பொருளாளர்' என்ற முறையில் சில நாட்களுக்கு முன்புகூட அவர்தான், 'செக்'குகளில் கையெழுத்துப் போட்டு—வங்கியிலிருந்து கழகச் செலவுகளுக்காக் கழகத்தின் பணத்தை எடுத்துக் கொடுத்திருக்கிறார்."

கேள்வி:—"தி. மு. கழகத்துக்குப் போட்டி அமைப்பு வந்துவிட்டதால், கழகத்துக்கும் பலவீனம் ஏற்படக்கூடும் என்று—'கட்சியின் தலைவர்' என்ற முறையில்—நீங்கள் எண்ணுகிறீர்களா?"

பதில்:—"அப்படிப்பட்ட எண்ணம் எள்ளளவும் இல்லை; அண்ணா யார் யாரை உட்கார வைத்துக் கொண்டு ஒரு மாதகாலம் விடிய விடியப் பேசிக் கழகத்தைத் தொடங்கினாரோ—அந்தக் கழகத்தைத் தொடங்கும்போது அண்ணாவைச் சுற்றி உட்கார்ந்திருந்த நாங்கள், இப்போதும் அண்ணா உருவாக்கிய கழகக் கோட்டையின் காவலர்களாக இருக்கிறோம்; இலட்சோபலட்சம [illegible] இந்தக் கழகத்தை [illegible] றென்றும் தயாராக [illegible]கள்."

கேள்வி:—"தனது ஆதரவாளர்களைப் போலீசார் இம்சைப்படுத்துவதாக கவர்னரிடம் எம். ஜி. ஆர். புகார் கொடுத்திருக்கிறாரே?"

பதில்:—"அப்படிச் சொல்லுவது இப்போது ஒரு 'பாஷன்' ஆகிவிட்டது."

கேள்வி:—"பச்சையப்பன் கல்லூரியில் இருந்த திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தை, 'அண்ணா திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்' என்று மாற்றி விட்டார்களாமே?"

பதில்:—"இப்போதாவது, 'எல்லாக் கல்லூரிகளிலும் மாணவர் தி. மு. க. பெரும்பான்மையாக இருந்தது' என்பதை பத்திரிகைக்காரர்களும்—எதிர்க் கட்சிக்காரர்களும் ஒத்துக் கொண்டதற்கு மகிழ்ச்சி!"

"கழக வரவு—செலவுக் கணக்கு பொதுக் குழுவில் ஒருமனதாக ஏற்கப்பட்டிருக்கிறது; அமைச்சர்களின் சொத்துக் கணக்குகளும்—சட்டமன்ற உறுப்பினர்களின் சொத்துக் கணக்குகளும் சட்டப் பேரவை முன்பு 1969, 1970, 1971 ஆகிய மூன்றாண்டுகளும்வைக்கப்பட்டிருக்கின்றன;

அந்தக் கணக்குகள், 1967-ல் நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பும் பின்பும் உள்ள சொத்து விவரங்களைக் குறிப்பிடுகின்ற கணக்காகும்; எங்களைக் கணக்கு கேட்கிறவர், 1969-ம் ஆண்டில மட்டும் சட்டமன்றத்தில் கணக்கை வைத்தார்; அதன் பிறகு எந்தக் கணக்கும் வைக்கவில்லை."

கேள்வி:—"கழகம் நடவடிக்கை எடுத்தது தவறு என்று கீழ் மட்டத்தில் இருந்து யாராவது தெரிவித்திருக்கிறார்களா?"

பதில்:—"அப்படி யாரும் தெரிவிக்கவில்லை"

விருத்தாசலத்தில்

எம்.ஜி.ஆர். ரசிகர்கள்—சமூக விரோத சக்திகள் வன்முறை

தவிர்க்க இயலாத நிலையில் போலீசார் துப்பாக்கிச் சூடு

விருத்தாசலம், அக். 18—

விருத்தாசலத்தில் எம் ஜி. ஆர். ரசிகர்கள், சமூக விரோதசக்திகளுடன் இணைந்து நடத்திய வன்முறை வெறியாட்டங்களைத் தொடர்ந்து போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்ட நிலைமை குறித்து தென் ஆற்காடு மாவட்டச் செயலாளர் எம். செல்வராஜ் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

"இன்று காலை 10 மணியளவில் விருத்தாசலத்தில் சில மாணவர்களும்—எம் ஜி ஆர். ரசிகர் மன்றத்தைச் சார்ந்தவர்களும் ஊர்வலமாகப் புறப்பட்டு, எம் ஜி. ஆருக்கு ஆதரவான முழக்கங்களும், முதலமைச்சர் கலைஞரையும்—என்னையும் எதிர்த்தும் இழித்தும் பழித்தும் முழக்கமிட்டுக்கொண்டு சென்றனர்.

அந்த மாணவர்கள் ஊர்வலம் முடிவுற்ற பிறகு, சமூக விரோதச் சக்திகள். என வீட்டையும்—பஸ்களையும்—ஆயில் மில்லையும் 'கொளுத்துவோம்' என்று கூச்சலிட்டுக் கொண்டு கடைத்தெரு வழியாக வரும்போது, கடைகளை மூடும்படிக் கடைக்காரர்களை மிரட்டினர்—கடைகளைச் சூறையாடிக் கொள்ளையிட்டனர்.

அதே நேரத்தில் எம் ஜி ஆர். ரசிகர்களும் கடைகள் மீதும், பாதுகாப்புக்கு வந்த போலீசார் மீதும், போலீசு நிலையத்தின் மீதும் சரமாரியாகக் கற்களையும்—சோடா புட்டிகளையும் எறிந்தனர்; நகராட்சி பஸ் நிலையக் கட்டடத்தை இடித்தனர்; சன்னல் கதவுகளைக் கொளுத்தினர்; நகராட்சி குப்பை வண்டியும் தீக்கிரையாக்கப்பட்டது; காவல் துறையினருக்குரிய போக்குவரத்து நிழற் குடையும் கொளுத்தப்பட்டது; இதன் காரணமாகப் போலீசாரும்—பொதுமக்களும் பலத்த காயமடைந்தனர்.

போலீசார் எச்சரிக்கை செய்தும் கூட்டத்தினர் பல பிரிவாகப் பிரிந்து என் வீட்டைச் சூழ்ந்து நின்று தாக்கவும்—எரிக்கவும் முயற்சி செய்தனர்; போலீசார் தடியடி—கண்ணீர்ப் புகை செய்தும கூட்டத்தைக் கலைக்க நேரிட்டது; இதன் காரணமாகப் பொதுமக்களில் 11 பேரும்—போலீசாரில் 6 பேரும்—தலைமைக் கான்ஸ்டபிள்கள் 2 பேரும்—சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரும் படுகாயம் அடைந்துள்ளனர்.

காயமடைந்த அனைவரும் கடலூர்—விருத்தாசலம் மருத்துவமனைகளில சிகிச்சை பெற்று வருகின்றனர்."

தலைமைக் கழக அறிவிப்பு

ஒழுங்கு நடவடிக்கை

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. பிரதிநிதியான பூவிருந்தவல்லி தோழர் பி சின்னசாமி அவர்கள், அண்மைக்காலமாகக் கழகக் கட்டுப்பாடு—ஒழுங்குமுறைகளை மீறியும், கழகத் தோழர்களிடையே பிளவுகளை உருவாக்கும் முறையிலும், கழகத் தலைவர்—தோழர்களை அவதூறுபடுத்திப் பகிரங்கமாக வட்டக் கழகக் கூட்டத்தில் பேசியும், பொதுமக்களிடையில் கழகத்திற்குக் களங்கம் கற்பித்தும் செயல்பட்டு வருவதாகக் குற்றஞ்சாட்டி—அவைகளின் பேரில் மாவட்டக் கழகச் செயலாளர் தலைமைக் கழகத்திற்குச் செய்துள்ள பரிந்துரையின் அடிப்படையில் அவர் இன்றுமுதல் கழகத்தின் சாதாரண உறுப்பினர்ப் பொறுப்பு உட்பட கழகத்தின் எல்லாம் பொறுப்புகளிலிருந்தும் தற்காலிகமாக விலக்கி (சஸ்பெண்டு) வைக்கப்படுகிறார்; தோழர் பி. சின்னசாமி அவர்கள்பேரில் விரைவில் முறைப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

'அறிவகம்' சென்னை-13
17—10—1972

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

பொதுப்பணித் துறை அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக் பாட்சா

நிகழ்ச்சிகள்

அக். 20 மாலை 6-மணி: செங்கல்பட்டு—அரசினர் மருத்துவக் கல்லூரி பெண்கள் விடுதி திறப்பு;

அக். 22: உதகமண்டலம்—குன்னூர்—மேட்டுப்பாளையம் நிகழ்ச்சிகள்.

அக். 23: கோவை மாவட்ட நிகழ்ச்சிகள்.

அக். 24: உடுமலைப்பேட்டை நிகழ்ச்சிகள்.

அக். 26: ஆலங்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. வி. சுப்பையா அவர்கள் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிகளில கலந்து கொள்ளுதல்.

மின்துறை அமைச்சர்

ஓ. பி. இராமன்

நிகழ்ச்சிகள்

அக். 20 21: திண்டுக்கல்.
அக். 22: உடுமலைப்பேட்டை.
அக். 23: திண்டுக்கல.

கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

அக். 20 காலை 9-மணி: அத்தனூர் (இராசிபுரம் வட்டம்) பள்ளிக் கட்டட அடிக்கல் நாட்டு விழா; 10-மணி: புதுப்பாளையம்—பள்ளிக் கட்டட அடிக்கல் நாட்டு விழா; 11-மணி: இராசிபுரம்—பள்ளிச் சீரமைப்பு மாநாடு; மாலை 4-மணி: வடுகம் உயர்நிலைப் பள்ளி அடிக்கல் நாட்டுவிழா; 4 30 மணி: புதுப்பட்டி—பள்ளி அடிக்கல் நாட்டுவிழா; 5 30 மணி: சிங்களாந்தபுரம் உயர்நிலைப்பள்ளி அடிக்கல் நாட்டு விழா; இரவு 7-மணி: நாமகிரிப்பேட்டை—பொதுமக்கள் வரவேற்பு; 8-மணி: குருசாமிபாளையம்—பொதுமக்கள் வரவேற்பு.

அக். 21 காலை 10-மணி: திருப்பூர்—எல். ஆர். ஜி. நாயுடு அரசினர் மகளிர் கலைக் கல்லூரிக் கட்டட அடிக்கல் நாட்டு விழா; மாலை 5-30 மணி: திருப்பூர்—தி. மு. தொ. மு. சங்கக் கட்டடத் திறப்பு; இரவு 7-மணி: திருப்பூர்—பொதுமக்கள் வரவேற்பு.

அக். 22 காலை 9-மணி: மதுக்கரை—நகரியக் குழு வரவேற்பு; 11-மணி: வெற்றிலைககாளிப்பாளையம்—நீர்த்தேக்கத் தொட்டி அடிக்கல் நாட்டுவிழா; மதியம் 12-மணி: சன்னிமடைபுதூர்—நீர்த் தேக்கத்தொட்டி திறப்பு; மாலை 4-மணி: கோவை—புலியகுளம் நகராட்சி உயர்நிலைப் பள்ளிக் கட்டடத் திறப்பு; 6-மணி: பொள்ளாச்சி—பொதுமக்கள் வரவேற்பு; இரவு 7-மணி: கோவை—சிதம்பரம் பூங்காவில் பொதுமக்கள் வரவேற்பு.

குளித்தலை நகர தி.மு.க.

பொது உறுப்பினர்கட்கு:

"குளித்தலை நகர தி. மு க. உறுப்பினர் கூட்டம், 20—10—72 இரவு 9 30 மணியளவில, கடம்பர் கோவில் திருமண மண்டபத்தில அவைத் தலைவர் டாக்டர் ஆ. வெங்கடாசலம் தலைமையில் நடைபெறும்; பொருள்: கழக ஆக்கப் பணிகள்; கழக உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகைதர வேண்டுகிறேன்" என்று நகர தி. மு. க. செயலாளர் கே. வி. சிவராஜ் அறிவிக்கிறார்.

ஆழ்கிணறுகள் தோண்ட அளிக்கப்படும்கடன் தொகை—ரூ. 5 000 ஆக உயர்வு

தஞ்சை, அக். 19—

துளையிட்டுத் தோண்டப்படும் ஆழ்கிணறுகளுக்கு அளிக்கப்பட்டு வந்த அதிகபட்சக் கடன் தொகையை ரூ. 5,000 ஆக உயர்த்த தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது; இதுவரையில் இத்தொகை ரூ. 3,000-ஆகஇருந்து வந்தது; ஆனால் இந்த உயர்வு குழாய்க் கிணறுகளுக்கு அனுமதிக்கப்படமாட்டாது.

மேற்குத் தஞ்சை மாவட்ட வளர்ச்சிக் குழு துணைக் கிணறுகள் தோண்டுவதற்கு அளிக்கப்பட்டுவரும் கடன் உதவியை அதிகரிக்க வேண்டுமென்று, ஏற்கனவே அரசைக் கேட்டுக் கொண்டிருந்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible]
இது வெளியிடப்படுகிறது.